Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 17, 2022

வெள்ளிக்கிழமை ஜூன் 17, 2022 | ஒளி: 08 கதிர்: 025 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# உணவு பஞ்சம் ஏற்படாது



■ பா.நிரோஸ்

அதிகளவான ஹெக்டேயர்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாது என தெரிவிக்கும் அமைச்சர் மஹிந்த அமரவீர, உணவுப்பஞ்சம் தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை வசமுள்ள நெல்லை விரைவாக அரிசியாக மாற்றி விநியோகிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கூறினார்.

வழமையாக மாதமொன்றுக்கு 500 தொடக்கம் 1,000 மெட்ரிக் தொன் அரிசியே விநியோகிக்கப்படும்.

தொடர்ச்சி P2

## மகனை ஆற்றில் வீசிய தாய்

தனது ஐந்து வயதான மகனை ஆற்றில் வீசிவிட்டு, தானும் ஆற்றில் குதிக்க முயன்ற 42 வயதான தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## எதிர்க்கட்சிக்கு அல்ல அரசாங்கமே வங்குரோத்து

### சஜித் தெரிவிப்பு: சமூக நலத்திட்டங்களை செய்யமுடியாது என்கிறார்

அரசாங்கமே இன்று வக்குரோத்து அடைந்துவிட்டது. எதிர்க்கட்சி வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிடவில்லை எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சியால் சமூக நலத்திட்டங்கள் பலவற்றை செய்யமுடிந்துள்ளது என்றார்.

வக்குரோத்து நிலையை அடைந்திருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியால், நாட்டுக்காக மூச்சுத் திட்டம், இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கான

தொடர்ச்சி P2

## விலைகள் எகிறின



கோழி முட்டை, கோழி இறைச்சியின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கோழி தீவனத்தின் விலை அதிகரிக்கப்பட்டு உள்ளமையால், விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பாடசாலைகளுக்கு வெள்ளி விடுமுறை



சகல அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளுக்கு இன்று 17ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

### குருந்தூர் மலை விவகாரம்:

## 23 ஆம் திகதி விசாரணை



■ சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட விஹாரை கட்டுமானப் பணி தொடர்பிலும், வழக்குத் தொடர்பிலும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம், பொலிஸாரிடம் விளக்கம் கோரியுள்ளது.

தொடர்ச்சி P2

## ஐஸ் கொடுத்த மாணவன் கைது

கந்தானை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 15 வயதான மாணவனுக்கு தனியார் வகுப்பில் வைத்து ஐஸ் போதைப்பொருளை விற்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ், மற்றுமொரு மாணவனை கந்தானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## மற்றுமொரு மரணம்

எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் நின்றிருந்த போது ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

### “காப்பாற்றி இருக்கலாம்”

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்டநேரம் வரிசையில் நின்றிருந்தவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதுதொடர்பில் அங்கிருந்த இராணுவம், பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்றோம் என ஏனைய சாரதிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



### 40,000 மெற்றிக் தொன் டீசலுடன்

## கொழும்பை வந்தடைந்தது இந்திய கப்பல்

இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 700 மில்லியன் கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கும் டீசலை ஏற்றிய கப்பல் நேற்று (16) கொழும்பை வந்தடைந்தது.

தொடர்ச்சி P2

### இலங்கையின் நெருக்கடி நிலைமைகள் குறித்து

## சர்வதேசத்துக்கு பீரிஸ் விளக்கம்

இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் குறித்து சர்வதேச பிரதிநிதிகளிடத்தில் வெளிவிவகாரத்துறை

தொடர்ச்சி P2



### எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு

## இரண்டு சர்வதேச தனியார் நிறுவனங்கள் தெரிவு



■ பா.நிரோஸ்

எரிபொருளை ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இக் கப்பல்களுக்கான நிதியை செலுத்துவதற்கான நாணயக் கடிதம் கிடைத்த பின்னரே, இக் கப்பல்கள் எப்போது நாட்டை வந்தடையும்

தொடர்ச்சி P2

### எரிபொருளை கொள்வனவு செய்ய

## பிரதமருக்கு எதிர்க்கட்சி புது யோசனை

■ பா.நிரோஸ்


ஆறுமாத கால அடிப்படையில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து கடனுதவியை பெற்று, எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

தொடர்ச்சி P2




இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியாவில் அதானி குழுமத்திற்கும் இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் இரகசிய கொடுக்கல் வாங்கல் குறித்த சர்ச்சையொன்று ஏற்பட்டுள்ள நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

## வரிசையில் மலர்ந்த நட்பு தண்ணீராய் ஓடியது



எரிபொருள் வரிசையில் பல்வேறான சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் வரிசைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. எரிபொருள் கிடைக்கும் நிலையங்களுக்குச் சென்று நிரப்பிக்கொள்வதிலேயே பலரும் மும்முரமாய் இருகின்றனர்.

தொடர்ச்சி P2

## இரும்பு இதயம் படைத்தவர் ரணில்



இரும்பு இதயம் படைத்த ஒருவரால் மட்டுமே நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையை சமாளித்து மீட்டெடுக்க முடியும். அவ்வாறான பணியொன்றையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்றார் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தம்மிக்கவுக்கு எதிராக மனு

முன்னாள் நிதியமைச்சரும் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்‌ஷவின் எம்.பி பதவி வெற்றிடத்துக்கு, வர்த்தகர் தம்மிக்க பெரேராவை நியமித்த தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி, மாற்றுக் கொள்கைக்கான நிலையம் அடிப்படை உரிமை மனுவொன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

தொடர்ச்சி P2

### தேர்தல் முறை சீர்திருத்தம்:

## தினேஷின் அறிக்கைக்கு பல கட்சிகள் எதிர்ப்பு

### த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்

பாராளுமன்ற தேர்தல்முறையை விகிதாசார முறையில் இருந்து கலப்பு முறைக்கு மாற்றும் சிபாரிசை முன்வைக்கும் தேர்தல் முறை சீர்திருத்த தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் ஒருதலைபட்ச இறுதி அறிக்கைக்கு, தெரிவுக்குழுவின் பெரும்பாலான அங்கத்தவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மகனை ஆற்றில் வீசிய தாய்

வத்தளை பொலிஸ் பிரிவில், கதிரான பாலத்தில் வைத்தே தனது ஐந்து வயதான மகனை அந்தப் பெண், நேற்று முன்தினம் (15) இரவு வேளையில் களனி ஆற்றில் வீசியுள்ளார்.

பாலத்தின் மேலே அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்த தாயின் செயற்பாட்டில் சந்தேகமடைந்த பிரதேசவாசிகள், அந்தத் தாயைப் பிடித்து, அருகிலுள்ளள வீதிச் சோதனை சாவடியில் கடமையிலிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதன்பின்னர் மீன்பிடி படகுகளைப் பயன்படுத்தி, குறித்த சிறுவனை தேடும் முயற்சியில் பிரதேசவாசிகள் ஈடுபட்டிருந்தனர். எனினும், அம்முயற்சி கைகூடவில்லை.

சிறுவன், வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்றும், அந்தப் பெண், சிறுவனின் தாயார் என்பதும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடற்படையினரின் உதவியுடன் அந்த சிறுவனைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த பொலிஸார், அந்தத் தாயைக் கைது செய்து தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்திவருவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட தாயை, வெலிசர நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (16) ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்க்கட்சிக்கு அல்ல அரசாங்கமே வங்குரோத்து

வேலைத்திட்டம், பஸ் நன்கொடை திட்டம் உள்ளிட்ட சமூக நல திட்டங்களை செயற்படுத்த முடியாது என்றார்.

வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை வழங்கி வைக்கும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் 22 ஆவது கட்டம், கண்டி மாவட்டத்தில் உள்ள நவயாலதென்ன கடுகஸ்தோட்டை, சமுத்திராதேவி மகளிர் கல்லூரியில் நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அங்கு உரையாற்றுகையில்; இந்நாட்டில் கல்வி முறை முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம், பொறியியல் போன்ற பாடப்பரப்புகள் முறையாகவும், வினைதிறனாகவும் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

முறைப்படி நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதைவிடுத்து மக்களுக்கு துரோகம் இழைத்து, பிரதமர் பதவி அல்லது பிற பட்டம் பதவிகளுக்கு விலைபோகும் எச்சில் துப்பும் பழக்கம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

குறைபாடுகள், போதாமைகள் மற்றும் இயலாமைகளை கூற அரசாங்கமொன்று தேவையில்லையென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட வாயாடல்கள் மற்றும் அறிக்கைகளை ஆட்சிக்கு வந்த பின்னர் அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டின் இளைய தலைமுறையை, தொழில்நுட்பத்தில் பரிச்சயமான உலகில் கொடிகட்டிப் பறப்பதற்கு உதவும் முகமாகவே இவ்வாறான உதவிகள் செய்யப்படுகின்றன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேசத்துக்கு பீரிஸ் விளக்கம்

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விளக்கமளித்துள்ளார். சகல நாடுகளின் ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 50வது அமர்வின் போது, வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜப்பானின் வெளிவிவகார பிரதி அமைச்சர், பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, கனடா, இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

ஜப்பானின் வெளிவிவகாரங்களுக்கான பாராளுமன்ற துணை அமைச்சர் மியாகே ஷிங்கோவுடனான இருதரப்பு சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மற்றும் பரஸ்பரம் ஆதரவான நட்புறவைக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கான ஒத்துழைப்புகளையும் கோரியுள்ளார். குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் இலங்கை உடனான ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்காவின் தூதுவர் நிரந்தரப் பிரதிநிதி திருமதி மிஷேல் டெய்லருடன் இடம்பெற்ற சந்திப்பில், இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார்.

## தம்மிக்கவுக்கு எதிராக மனு

அந்த மனுவில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவின் பிரகாரம், பாராளுமன்றத்தில் தேசிய பட்டியலில் வெற்றிடம் நிலவுமாயின் அந்த வெற்றிடத்துக்கு, அந்த அரசியல் கட்சியில் இருந்து தேர்தலில் போட்டியிட்ட அல்லது வேட்பு மனுவில் பெயர் இருக்கின்ற இன்றேல், தேசிய பட்டியல் பெயர் இருக்கின்றவர்களையே நியமிக்கவேண்டும்.

அதனடிப்படையில் பாரக்குமிடத்து வர்த்தகர் தம்மிக்க பெரேரா, மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தவொரு பட்டியலில் உள்வாங்கப்படாதவர். ஆகையால், அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவின் பிரகாரம், தேசிய பட்டியலின் ஊடாக எம்.பி பதவியை வகிப்பதற்கு அவர் எவ்வகையிலும் தகுதியற்றவர் என்றும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தகரான தம்மிக பெரேரா பல்வேறு துறைகளின் கீழ் பல வர்த்தகங்களுக்குச் சொந்தக்காரரர். அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையோ இன்றேல் அமைச்சர் பதவியையோ வகிப்பாராயின் பக்கச்சார்பு மற்றும் ஆர்வம் தொடர்பிலான பிரச்சினைகள் எழும் என்றும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உணவு பஞ்சம் ஏற்படாது

எனினும், அதனை 10 ஆயிரம் மெட்ரிக் தொன்னாக அதிகரிக்க நாம் ஆலோசனை வழங்கி உள்ளோம். எனவே தேவைக்கு ஏற்ப அரசியை சதோச, சுப்பர் மார்க்கெட்டுக்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அரிசி மாபியாவை இல்லாதொழிக்க நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபை நேரடியாக தலையீடுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார். தேவையைவிட பத்து மடங்காக அரிசியை சந்தைகளுக்கு விநியோகிக்கும் போது அரிசிக்கான தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியும் எனவும் கூறினார்.

நான் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு முன்பு 248,000 ஹெக்டேயர் நிலப்பரப்பே விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. தற்போது 470,000 ஹெக்டேயராக அதிகரித்துள்ளது. எனவே நாட்டின் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. ஆகவே மக்களுக்கு முன்பிருந்த அச்சம் இப்போது தேவையில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## விலைகள் எகிறின

இதன்படி ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாயாகும். முட்டையொன்றின் விலை 47 ரூபாய் 50 சதத்துக்கு நேற்றிலிருந்து (16) விற்கப்படுகின்றது என அந்த சங்கம் அறிவித்துள்ளது.

*Currently, the price of a 1kg of chicken is over Rs.1200/- and an egg is Rs.47 and 50 cents.*

## கொழும்பை வந்தடைந்தது இந்திய கப்பல்

40,000 மெற்றிக் தொன் டீசலுடன் நேற்று கொழும்பை வந்தடைந்த கப்பலிலுள்ள டீசலை விநியோகம் செய்வதற்கு மேலும் 03 நாட்கள் செல்லும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## இரண்டு சர்வதேச தனியார் நிறுவனங்கள் தெரிவு

என்ற திகதியை அறிவிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.இலங்கைக்கு பெற்றோல் மற்றும் டீசலை வழங்க இரண்டு புதிய சர்வதேச தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விமான எரிபொருள் விநியோகிக்க மற்றுமொரு தனியார் நிறுவனமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். -

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் நாட்டுக்கு வர இருக்கும் இறுதியான எரிபொருள் கப்பல் நாட்டை வந்தடையும் என பிரதமர் அண்மையில் கூறியிருந்தார். இதனை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு பல்வேறு கருத்துக்களை பரப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இரு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்கு தேவையான நிதியை வழங்குவதற்கானநாணயக் கடிதத்தை மக்கள் வங்கி வழங்கியதன் பின்னர், இக் கப்பல்கள் நாட்டை எப்போது வந்தடையும் என்பது தொடர்பான உரிய திகதி அறிவிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 9 மற்றும் 10ஆம் திகதிகளில் டீசல், பெற்றோல் ஏற்றிக்கொண்டு வரயிருந்த இரு கப்பல்களுக்கான நாணயக் கடிதத்தை இலங்கை வங்கி வழங்குவதற்கு தயாராக இருந்தது. எனினும் பின்னர் இலங்கை வங்கியால் நாணயக் கடிதத்தை வழங்க முடியாது போனது. இதனைத் தொடர்ந்து டீசல் மற்றும் பெட்ரோலை ஏற்றிக்கொண்டு வரவிருந்த இருக்கப்ப நிறுவனங்களுக்கும் எங்களால் நிதியை வழங்க முடியாது என்பதை அறிவித்தோம். இதனால் டீசல், பெற்றோலை பெற்றுக்கொடுக்க முடியாமல்போனது எனவும் கூறினார்.

இலங்கை வங்கியும் நாணயக் கடிதத்தை வழங்குவதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து இருந்தாலும், அந்த வங்கியால் அதனை வழங்க முடியாது போனது. இதனாலேயே நாம் இலங்கை மக்கள் வங்கியுடன் கலந்துரையாடி கடன் கூற்றுக் கடிதத்தை பெற உள்ளோம். கடன் கூற்றுக் கடிதம் கிடைக்கப் பெற்றதும் அடுத்த எட்டு நாட்களுக்குள் மூன்று கப்பல்களில் எரிபொருள் ஐப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கையிருப்பில் உள்ள டீசலை எதிர்வரும் 25ஆம் திகதி வரையிலும் பெற்றோலை 21ஆம் திகதி வரையிலும் முகாமைத்துவம் செய்ய முடியும் எனவும் கையிருப்பில் உள்ள பெற்றோலை முழுமையாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகித்தால் அதனை 21ஆம் திகதி வரையில் பயன்படுத்த முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பிரதமருக்கு எதிர்க்கட்சி புது யோசனை

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்காரே இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

நாட்டின் நெருக்கடி நிலைமைகளை மக்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் போலவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகிறார். பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் பிரதமரே நாட்டுக்குத் தேவை, மாறாக ஊடகவியலாளர் போல் செயல்படும் பிரதமர் நாட்டுக்கு தேவை இல்லை எனவும் தெரிவித்தார்.

விடுமுறையை கழிப்பதற்காகவே சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். ஆனால் எமது நாட்டில் இத்தனை வரிசைகள் காணப்படுகின்றன. எனவே இந்த வரிசைகளைப் பார்த்து பின்னரும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருவார்களா எனவும் கேள்வி எழுப்பினார்.தற்போது எரிபொருளுக்கு செலவிடப்படும் நிதியை உரத்தை கொள்வனவு செய்ய செலவிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்வதால் நாட்டில் ஏற்படவிருக்கும் ஒரு தட்டுப்பாட்டை தடுக்க முடியும் எனவும், கொழும்பிலுள்ள விகாரமாதேவி பூங்கா உள்ளிட்ட இடங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கொழும்பில் உள்ள காணிகள் பெறுமதியுடையவை. அது மாத்திரமல்லாது பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் விவசாய நடவடிக்கைகள் என கூறிக்கொண்டு கொழும்பில் உள்ள பெறுமதிமிக்க காணிகளை அரசாங்கத்தின் நண்பர்களுக்கு வழங்க திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எமக்கு காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## இரும்பு இதயம் படைத்தவர் ரணில்

ஐக்கிய தேசிய கட்சியின் காரியாலையத்தில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாடுகளின் ஆதரவை முழுமையாக இழந்திருந்த இலங்கைக்கு இன்று மீண்டும் சர்வதேச உதவிகள் கிடைத்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் நெருக்கடிகள் மற்றும் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாதிருந்த நிலையில் இன்று பலமான நாடுகளின் ஆதரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெற்று வருகின்றார். அதில் முக்கிய வெற்றிகள் சில எமக்கு கிடைத்துள்ளன. எனினும் இவ்வாறான நிலையிலும் ஒரு சிலர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்து வருகின்றனர்.

இவ்வாறான நெருக்கடி நிலையில் ரணில் பிரதமர் பதவியை பெற்றிருக்காதிருந்தால் நாடு பாரிய நெருக்கடிக்குள் வீழ்த்திருக்கும். பிரதமர் பதவியை, நிதி அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ளுங்கள் என அழைப்பு விடுத்த வேளையில் எவரும் அதனை ஏற்றுக்கொள்ளாது பின்வாங்கிவிட்டு, இன்று பிரதமர் ரணிலை விமர்சித்துக்கொண்டுள்ளனர். இரும்பு இதயம் படைத்த ஒருவரால் மட்டுமே இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் என்றார்.

## குருந்தூர் மலை விவகாரம்: 23 ஆம் திகதி விசாரணை

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான குருந்தூர் மலையில் 12ஆம் திகதியன்று நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விஹாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர், குருந்தூர்மலை தொடர்பில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில், நேற்று (16) நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதன்போது, நீதிமன்றம் ஏற்கெனவே, வழங்கிய கட்டளைகளை மதிக்காமல் அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விஹாரை தொடர்பிலும், இந்த வழக்குத் தொடர்பில், நீதிமன்றிற்கு வழங்கவேண்டிய அறிக்கைகளை பொலிஸார் தொடர்ச்சியாக வழங்காது, சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டதையும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் இணைந்து மன்றில் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

குருந்தூர்மலை ஆலய நிர்வாகம், பொலிஸார் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆழ்ந்து அவதானித்த நீதவான், வழக்குத் தொடுனரான பொலிஸார், குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக எதிர்வரும் 23 ஆம்திகதி இந்த வழக்கை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு திகதியிட்டுள்ளார்.

## ஐஸ் கொடுத்த மாணவன் கைது

இவ்விருவரும் சர்வதேச பாசாலையில் கல்வி பயிலுகின்றனர் என விசாரணைகளின் ஊடாக அறியமுடிகின்றது.

கந்தானை தெற்கு, பட்டகம பிரதேசத்தில் மேலதிக வகுப்புக்கு அண்மையில் வைத்து, போதைப்பொருள் விற்பனைச் செய்யப்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்தே, மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த மாணவனுக்கு, அந்தப் போதைப்பொருளை கொடுத்தவர் யாரென்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மற்றுமொரு மரணம்

பாணந்துறை வேகட எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், எரிபொருளை நிரப்பிக்கொள்வதற்காக, தனது ஓட்டோவின் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்த 53 வயதான நபர், மரணமடைந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக அவர், மரணமடைந்துள்ளார் என பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, ஹிரன, விசல் உயன பிரதேத்தை வசிப்பிடமாகக் கொண்டு சுகத் பெர்ணான்டோ என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

## "காப்பாற்றி இருக்கலாம்"

பாணந்துறை வேகட எரிபொருள் நிரப்பும் நிலையில் வரிசையில் நின்றிருந்த போது, மரணமடைந்தவர் தொடர்பில் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவரை, கொண்டு செல்வதற்கு பலவழிகளிலும் முயற்சித்தோம். 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்துக்கும் பலமுறை அழைத்தோம். அம்புலன்ஸ் வண்டிக்கும் அழைத்தோம். எனினும், அம்புலன்ஸ் வண்டி பம்பலப்பிட்டியில் இருக்கிறது என பதிலளித்தனர்.

இறுதியாக, வரிசையில் நின்றிருந்த ஓட்டோ ஒன்றில், ஓரளவுக்கு பெற்றோல் இருந்தது. அந்த ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு சென்றோம். எனினும், ஏற்கெனவே மரணித்துவிட்டாரென வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துவிட்டது.

உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனங்கள் கிடைத்திருக்குமாயின் அவரை காப்பாற்றியிருக்கலாம் என்றும் சாரதிகள் தெரிவித்தனர்.

## வரிசையில் மலர்ந்த நட்பு

அவ்வாறுதான், பண்டாரகம பகுதியிலும் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில், ஐந்து நாள்களாக இருவர் காத்திருந்துள்ளனர். இவ்விருவரும் சிறிய பட்டா லொறி வைத்திருக்கின்றனர். அதிலொருவர் இளநீர் விற்பவர் மற்றையவர் சாரதியாவார்.

இவ்விருவரையும் அவதானித்த மற்றுமொருவர், அவ்விருவருடன் நட்பாக பழக்கிக்கொண்டுள்ளார். "மற்றுமோர் இடத்தில் களவாக எரிபொருள் கிடைக்கும் அதுவும் குறைந்த விலையில் கிடைக்குமென" புதியவர் கூறியுள்ளார்.

இதனைக்கேட்ட அவ்விரு சாரதிகளும், 60 லீற்றர் டீசலுக்காக 60 ஆயிரம் ரூபாய் பணத்தை கொடுத்துள்ளனர். பேசி முடித்தப்படி, மறைவான இடமொன்றில் கேன்கள் வைக்கப்பட்டுள்ளன. அந்தத் தகவலையும் புதிய நபர் தெரிவித்துவிட்டு, பணத்தை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார்.

வரிசையில் நின்றிருந்த இவ்விரு சாரதிகளும் பட்டா லொறியை எடுத்துக்கொண்டு புதிய நபர் கூறிய மறைவான இடத்தில் கேன்கள் இருந்துள்ளன. கான்களை ஏற்றிக்கொண்டு சிறிது தூரம் சென்றதன் பின்னர், வாகனத்தில் இருந்த கேன் ஒன்றை இறக்கி, டீசலை நிரப்பி உள்ளனர்.

அப்போதுதான், புதிய நபர் கொடுத்தது டீசல் அல்ல, தண்ணீர் என தெரியவந்துள்ளது.

## தினேஷின் அறிக்கைக்கு

தெரிவுக்குழுவில் ஏற்படாத உடன்பாடுகளையும், உண்மைக்கு புறம்பான தகவல்களையும் உள்ளடக்கி இந்த இறுதி அறிக்கையை தெரிவுக்குழு தலைவர் சமர்பித்துள்ளார். இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படுமானால் அங்கும் அதை நாம் எதிர்ப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த போலி அறிக்கையை ஏற்க முடியாது என தெரிவுக்குழுவில், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

கலப்பு முறையை ஆதரிக்க முடியாது என ஈ.பி.டீ பி தெரிவித்ததாக குழு உறுப்பினர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மீதான சர்ச்சைக்குரிய கருத்து

# விசாரணை வேண்டும்



பா.நிரோஸ்

ஜனாதிபதி தொடர்பில் இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கூறிய சர்ச்சைக்குரிய கருத்தை, அவரால் மீள திரும்பப் பெற முடியாது என கோப் குழுவின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று(16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர், ஜனாதிபதி தொடர்பில் கோப் குழுவின் முன்னிலையில் கூறிய சர்ச்சைக்குரிய கருத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளார். எனினும் அவரால் அவ்வாறு செய்ய முடியாது. கோப் குழுவின் முன்பாக சரியான தகவல்களை வழங்குவது, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவரது பொறுப்பாகும்.

ஜனாதிபதி இதனை மறுத்திருந்தாலும் இது தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்ச்சைக்குரிய கருத்தை கூறிவிட்டு, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் பதவி விலகியிருந்தாலும் அவரால் இதிலிருந்து தப்பிக்க முடியாது. இந்தச் சர்ச்சைக்குரிய கருத்தால் இலங்கைக்கு பெரும் உதவிகளை வழங்கி வந்த இந்தியா கோபமடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’

## அறிக்கையில் கைச்சாத்திட்டார் ஞானசார தேரர்



இலங்கையின் சட்ட நகர்வுகள் குறித்து ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியால் தயாரிக்கப்பட்ட அறிக்கை முழுமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த அறிக்கையில் செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் கையொப்பமிட்டுள்ளார். அறிக்கையை விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைமையில் ஜனாதிபதியுடன் சந்திப்புகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வேலைத்திட்டங்களில் சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்த கலகொட அத்தே ஞானசார தேரர், விரைவில் ஜனாதிபதியை சந்தித்து அறிக்கை குறித்து தெரியப்படுத்துவதாகவும் கூறினார்.



கோப் குழுவின் அறிக்கை குறித்து

## 23 இல் சபை ஒத்திவைப்பு விவாதம்

நாட்டில் தற்பொழுது நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து 22ஆம் திகதி சபை ஒத்திவைப்பு விவாதமும் கடந்த மார்ச் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை நடைபெறவிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

பாராளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், எதிர்வரும் 21ஆம் திகதி குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன் கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விவாதித்து நிறைவேற்றப்படும்.

எதிர்வரும் 22ஆம் திகதி எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய நாட்டில் தற்பொழுது நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது. அத்துடன், அண்மையில் இடம்பெற்ற குழப்பமான சம்பவங்களின் போது படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல தொடர்பான அனுதாபப் பிரேரணையின் இரண்டாவது நாள் விவாதத்துக்காக எதிர்வரும் 24ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் பி.ப 5.30 வரையான நேரத்தை ஒதுக்குவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

தொழிலாளர் பிரச்சினைகளை

## விரைந்து தீர்க்க புதிய சட்டமூலம்



2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் கூடிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தற்போது, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்படி, ஓர் ஊழியர் தனது தொழிலை இடைநிறுத்தும் சந்தர்ப்பங்களில், அந்த செயன்முறையை நிறைவுறுத்துவதற்கு மாத்திரமே தொழிலாளர் நியாயசபையின் கீழ் வழக்குத் தொடரப்படுகிறது. ஆனாலும், பணிபுரியும் ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி, கொடுப்பனவு, தொழில் விதிமுறைகள், நிபந்தனைகள் தொடர்பான பல்வேறு சட்டங்களின் விதிகளை முதலாளிமார் ஏற்காத அல்லது மீறும் சந்தர்ப்பங்களில், நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியும்.

நாடளாவிய ரீதியில் செயற்படும் சுமார் 80 நீதவான் நீதிமன்றங்களில் 16,000க்கும் அதிகமான வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளமையே இங்கு எழும் பிரதான பிரச்சினையாகும். இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏதேனும் நீதி கிடைக்க நீண்ட காலம் எடுப்பதோடு தற்போது மிகக் குறைவான வழக்குகளே நீதவான் நீதிமன்றங்களில் எடுத்துக்கொள்ளப்படுவதாலும் இந்த வழக்குகள் நாடளாவிய ரீதியில் செயற்படும் 37 தொழில் நியாய சபைகளுக்கு அனுப்பப்பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை துரிதப்படுத்த முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்தச் சட்டம் தொழிலாளர் நியாயசபை தலைவர்களுக்கு வழக்கை நடத்திச் செல்வதற்கான அதிகாரத்தை வழங்கும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது. கடந்த காலங்களிலும் தொழிலாளர் நியாயசபைகளுக்கு குறித்த அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும், இதன்மூலம் பல வழக்குகளை துரிதமாக நிறைவுசெய்து வைக்க முடிந்தது எனவும், ஆனால் பின்னர் அந்த அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பொருளாதார நிலைமைகள் காரணமாக எந்தவொரு தொழிற்சாலையும் மூடப்படும் பட்சத்தில் முதலாளிமார் மற்றும் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## கட்டுவாப்பிட்டிய செல்லும் வீதியில் கைக்குண்டு

எம். இசட் ஷாஜஹான்




நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டிய தேவாலயத்திற்கு செல்லும் வீதியோரத்தில் கிடந்த கைக்குண்டு, நேற்று (16) பகல் மீட்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

எந்த நோக்கத்திற்காக இந்தக் கைகுண்டு இங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக இதுவரை தெரியவரவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவு, நீதிமன்ற உத்தரவின்படி அந்தக் குண்டை செயலிழக்கச் செய்தது.

பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், பிராந்திய குற்ற புலனாய்வு பிரிவினர் ஆகியோர் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில்

## மொழிப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

தற்போது அதிக கவனம் செலுத்தி வரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விசேட பயிற்சித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்ற போதிலும் யாழ். மாவட்டத்தில் அவ்வாறான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, யாழ். மாவட்டத்தில் மொழிப் பயிற்சித் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை விடுத்தார்.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் கூடிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்தின் போதே இந்த விடயம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தொடர்ந்து 4 வது ஆண்டாகவும் Brand Finance மூலம்

## டயலொக் ஆசிஆட்டா தரப்படுத்தப்பட்டு உள்ளது




படத்தில் இடமிருந்து வலம்: Brand Finance Lanka நிறுவனத்தின் தலைவர் ருசி குணவர்தன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணயக்கார

இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அதன் 19வது பதிப்பில், உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance இன் வருடாந்த ஆய்வில் தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் ‘இலங்கையின் மிகவும் பெறுமதியான வர்த்தக நாமம்’ என்ற பட்டத்தை பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளது. பிராண்ட் மதிப்பு ரூ. 54.0 பில்லியன், டயலொக் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் AAA இன் வர்த்தக மதிப்பீட்டைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன், அத்துடன் தொடர்ந்து 15 ஆவது ஆண்டாக ‘மிகவும் பெறுமதியான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்’ என்ற பட்டத்தையும் இலங்கையின் வாழ்வாதாரங்கள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய வர்த்தக நாம நெறிமுறைகளை மீண்டும் உறுதிப்படுத்தியது.

அணுகக்கூடிய, உள்ளடக்கிய, மற்றும் வாடிக்கையாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு ஒரே மாதிரியாக பயனளிக்கும் நிலையான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், இலங்கையை டிஜிட்டல் தேசமாக உயர்த்துவதில் டயலொக் தொடர்ந்து முன்னின்று செயற்படுகின்றது. இந்தப் பாராட்டுக்கள், 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் வர்த்தக நாமத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் உணர்வுகளை பிரதிபலிக்கின்றது, இது ‘இதயப்பூர்வமான சேவை’ என்ற நிறுவனத்தின் மதிப்புகளுடன் எதிரொலிக்கிறது, இது ‘எதிர்காலத்தை இன்றே வழங்குவதற்கான அதன் உறுதியான உறுதிப்பாட்டினை வழங்குகின்றது. மேலும், டயலொக் வர்த்தக நாமம் இலங்கையர்களின் இதயங்களிலும் மனங்களிலும் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில், டயலொக் தொடர்ந்து 6வது வருடமாக ‘அதிகம் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாக’ அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனைகள், தொற்றுப்பரவலின் போது, நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் துறையின் முன்னேற்றம், சுகாதாரப் பணியாளர்களுக்கான தகவல் தொடர்பு வசதிகளை வழங்குதல், வீட்டு அடிப்படையிலான பராமரிப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட சமூகங்களின் பல அம்சங்களை ஆதரிப்பதில் டயலொக்கின் தொடர்ச்சியான முயற்சிகளையும் அங்கிகரிக்கிறது. மேலும், நிறுவனம் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு மிகப்பெரிய இலவச டிஜிட்டல் கல்வி தளமான ‘நெனச’ தொலைக்காட்சியை விரிவுபடுத்தியது. அவசியமான 100,000 பாடசாலை மாணவர்களுக்கு டேட்டா புலமைப்பரிசில்களை வழங்கியது. நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கும் இலவச இணைப்பு வசதிகளை விரிவுபடுத்தியது. தொற்றுநோய் மற்றும் இயற்கை பேரிடர்களால் மோசமாக பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஏராளமான நிவாரண திட்டங்களையும் வழங்கியுள்ளது. மேலும், பொருளாதார நெருக்கடியால் இலங்கை முழுவதிலும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மைக்கு எதிராகப் போராடும் நோக்கில், 2022 ஏப்ரல் மாதத்தில் பல நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆல் ‘மனிதநேய ஒன்றிணைவு’ எனும் மனிதாபிமான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. MAS Holdings, Hemas Holdings PLC, CBL Group, Citi bank, Sunshine Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் போன்ற பல ஒத்த எண்ணம் கொண்ட பங்காளர்களுடன் இணைந்து, PwC ஸ்ரீ லங்காவுடன் இணைந்து 200,000 குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், “இலங்கையின் மிகவும் பெறுமதியான வர்த்தக நாமமாக 4 ஆவது ஆண்டாகவும் தொடர்ந்து 15 ஆவது ஆண்டாக ‘மிகவும் பெறுமதியான தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாகவும்’ தொடர்ந்து 6 ஆவது ஆண்டாக ‘அதிக விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாகவும்’ தரவரிசைப்படுத்தப்பட்டதையிட்டு பெருமையடைகிறோம். இந்த அங்கிகாரம், எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களின் உணர்வுகளை எதிரொலிக்கிறது. இலங்கையின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் வலுவூட்டுவதற்கான எங்கள் பயணத்தில் தொடர்ந்து உற்சாகப்படுத்தகின்றது. மேலும் அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை நோக்கி எங்கள் நாட்டின் டிஜிட்டல் அபிலாஷைகளையும் தூண்டுகின்றது. நாங்கள் சேவை செய்யும் சமூகங்களுக்கு மாற்றியமைக்கும் தீர்வுகளை உள்ளடக்கிய மற்றும் சமமான அணுகல் மூலம் சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் இணைப்பை வழங்குவதற்கான எங்கள் தீர்மானத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” என மேலும் தெரிவித்தார்.

Brand Finance Lanka நிறுவனத்தின் தலைவர் ருசி குணவர்தன கருத்து தெரிவிக்கையில், “முதலிடம் பிடித்த டயலொக்கிற்கு எனது வாழ்த்துகள். மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய முக்கிய வர்த்தக நாமமாக இது திகழ்கின்றது. தொலைத்தொடர்புத் துறையில் நாம் அளவிடும் பல குறிகாட்டிகளில் வர்த்தக நாம வலிமையைக் கட்டியெழுப்புவதற்கான அதன் திறன், டயலொக் வர்த்தக நாமத்தின் மதிப்பை அதிகரிக்கச் செய்கிறது.

Brand Finance என்பது இலங்கை உட்பட 20 க்கும் மேற்பட்ட நாடுகளில் அலுவலகங்களைக் கொண்ட உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமாகும். Brand Finance, வர்த்தக நாமங்களின் நிதி மதிப்பைக் கணக்கிடுவதன் மூலம் சந்தை மற்றும் நிதிக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது. Brand Finance அதன் league tables களில் உள்ள பிராண்டுகளின் மதிப்புகளை Royalty Relief அணுகுமுறையைப் பயன்படுத்தி கணக்கிடுகிறது. இது ISO 10668 இல் அமைக்கப்பட்டுள்ள தொழில் தரநிலைகளுடன் இணங்கும் வர்த்தக மதிப்பீட்டு முறை ஆகும். வர்த்தக நாமத்திற்கான உரிமம் வழங்குவதன் மூலம் ஒரு வர்த்தக நாம உரிமையாளர் அடையக்கூடிய நிகர பொருளாதார நன்மையாக புரிந்து கொள்ளப்படும் ‘வர்த்தக நாம மதிப்பை’ அடைய, அதன் பயன்பாட்டிற்காக வசூலிக்கப்படும் ராயல்டி விகிதத்தை கணக்கிடுவதன் மூலம் ஒரு வர்த்தக நாமத்திற்கு திறந்த சந்தையில் கூறப்படும் எதிர்கால வருவாயை மதிப்பிடுவது இதில் அடங்கும்.

8 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக

# வழக்குத் தாக்கல்

கனகராசா சரவணன்





மட்டக்களப்பு நகர் பகுதியில், நுகர்வோர் அதிகார சபையினர் அரிசி விற்பனை நிலையங்கள், அரிசி ஆலைகளை புதன்கிழமை (15) முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

"அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த இரு வர்த்தக நிலையங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், இதுவரை 8 அரிசி விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது" என மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

அண்மைகாலமாக நுகர்வோர் அதிகார சபைக்கு தொடர்ச்சியாக வர்த்தக நிலையங்களில் அரிசி அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிகவிலைக்கு விற்பனை செய்வதாகவும், பல வியாபாரிகள் அரிசியை பதுக்கி வைத்துள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை முற்றகையிட்டபோது, அங்கு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்ததையடுத்து, அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளதுடன், அதனை தொடர்ந்து ஊறணி பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றை முற்றுகையிட்ட போது, அங்கு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வதை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச கட்டுப்பாடான சோற்று அரிசி 220 ரூபாயும் பச்சையரி 210 ரூபாயும் சம்பா அரிசி 230 ரூபாயும், கீரிச் சம்பா 260 ரூபாயும் ஆகும். ஆனால், இந்த விலைகளுக்கு மேலாக விற்பனை செய்கின்ற வியாபாரிகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் எமக்கு அறிவிக்குமாறும், இதனால் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும், இவர்களுக்கு நீதிமன்றம் ஊடாக ஒரு இலட்சம் ரூபாய் தொடக்கம் 5 இலட்சம் ரூபாய் வரையில் தண்டப்பணம் விதிக்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு தொழில் வாய்ப்புச் சந்தை

ஹஸ்பர்





நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் கொண்டு, வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை எதிர்பார்ப்பவர்களுக்கான தொழில் சந்தை இடம் பெற்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமும், பிரதேச செயலகங்களும் இணைந்து இதனை நேற்று (16) ஏற்பாடு செய்திருந்தன.

திருகோணமலை 4ம் கட்டையில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக மாவட்ட காரியாலயத்தில் குறித்த தொழில் சந்தை நடைபெற்றது.

இதில் மத்திய கிழக்கு நாடுகள், ரோமானியா போன்ற நாடுகளுக்கான தொழில் வாய்ப்பினை பெறுவதற்கான நேர்முகப் பரீட்சையும் இடம் பெற்றன.

சவூதி அரேபியா, கட்டார், குவைட், ஓமான், டுபாய் போன்ற நாடுகளில் தொழில் வாய்ப்பை பெற குறித்த தொழில் சந்தை இடம் பெற்றது.

சாரதி, மேசன், தொழிலாளி, பிளம்பர், எலக்ரீசியன், காபெண்டர், வெயிட்டர் மற்றும் ரோமானியா நாட்டுக்கான ஹோட்டல் துறையில் வேலை வாய்ப்புகளும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு



எப்.முபாரக்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, சிங்கப்பூரை சேர்ந்த நிறுவனமொன்று இலங்கை இராணுவத்தின் ஊடாக நாடு பூராகவும் உலருணவுப் பொதிகள் வழங்கி வருகின்றது.

அதற்கமைய புல்மோட்டை பகுதியில் உள்ள வறிய குடும்பங்கள், விதவைகளுக்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (16) அப்பிரதேசத்திற்கான இராணுவ கட்டளையிடும் அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக், புல்மோட்டை அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஜனாப் மஹ்மூத் மௌலவி ஆகியோர் கலந்து கொண்டு குறித்த பயனாளிகள் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# ஆடிவேல் விழா உற்சவம்

சகா





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவத்தையொட்டிய, ஆலயத்தின் அதிகார சபை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (19) ஆலய முன்றலில் ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற இருக்கின்றது .

எதிர்வரும் ஜூலை மாதம் 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

இந்த உற்சவம் 18 நாள்கள் நடைபெற்று ஜூலை மாதம் 28 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநதாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.



# நீண்ட வரிசையில் பல நாள் காத்திருப்பு



வ.சக்தி

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் புதன்கிழமை (15) மாலை பெற்றோல் வந்ததையடுத்து, பெற்றோல் நிரப்புவதற்காக ஓட்டோ , மோட்டார் சைக்கிளுடன் மிக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில் அரச உத்தியோகஸ்தர்கள் தனியான ஒரு வரிசையில் சென்று பெற்றோல் நிரப்புவதற்கு சென்றவேளை, ஏனையோர் வாக்குவாத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடமையிலிருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும், நிலைமையைக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்ததையடுத்து, பின்னர் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி ரி.அபயவிக்கிரம வருகை தந்து சிறிது நேரம் பெற்றோல் வழங்குவதை இடை நிறுத்தி, நிலைமையை சீராக்கினார். அதன் பின்னர் வரிசைக்கிரமமாக பெற்றோல் வழங்கப்பட்டது.

# இரத்ததான முகாம்




ஏ.எச்.ஏ. ஹுஸைன்

குபா இளைஞர் கழகம் மற்றும் குபா விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து 3 ஆவது தடவையாக ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்ததான முகாம் காத்தான்குடியில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஞாயிற்றுக்கிழமை (19) காலை 8 மணிக்கு காத்தான்குடி - 5 ஜாமியுழ்ழாபிரீன் வித்தியாலயத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போலி ஆவணங்கள் உலாவுவதால்

# காணி கவனம்

க. அகரன்



வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் போலி ஆவணங்களின் ஊடாக காணிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால், காணி கொள்வனவாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

புலம்பெயர் நாட்டில் வசிப்பவர்கள் மற்றும் பல ஆண்டுகளாக துப்புரவு செய்யப்படாமல் காணப்படும் காணிகளே இவ்வாறு விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் தங்களது காணிகள் தொடர்பான ஆவணங்களை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகத்தில் உள்ள காணிக் கிளைகளில் சரிபார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணிகளை கொள்வனவு செய்பவர்கள், குறித்த காணிக்கான ஆவணங்களின் பிரதிகளை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக காணிக்கிளைகளில் கொடுத்து, உண்மையான உரிமையாளர் மற்றும் காணியின் தன்மை தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.



# நள்ளிரவு முதல் காத்திருப்பு

ரொசெரியன் லெம்பர்ட்

மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாள்களுக்கு பின்னர் நேற்றைய தினம் (16) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது

இதில், நள்ளிரவு முதல் காத்திருந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு 300 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. பொலிஸாராலும், இராணுவத்தினராலும் பாதுகாப்பு முன்னெடுக்கப்பட்டே, மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

# யாழில் நீளுகிறது வரிசை



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் பெற்றோலுக்காக மக்கள் நேற்று (16) மிக நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து பெற்றோலை பெற்றுச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி, சுன்னாகம், புலோலி, பரமேஸ்வர சந்தி ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று (16) அதிகாலை 4 மணி தொடக்கம் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து, 1,000 ரூபாய்க்கே பெற்றோலை பெற்றுக்கொண்டுள்ளனர்.

# வெள்ளி முதல் வரப்பிரசாதம்

என்.ராஜ், எம்.றொசாந்த், நிதர்சன் வினோத்



யாழ்ப்பாணம் - கொழும்பு விசேட புதிய ரயில் சேவை இன்று (17) இரவு முதல், ஆரம்பிக்கப்பட உள்ளதாக யாழ். ரயல் நிலைய அதிபர் தி. பிரதீபன் தெரிவித்தார்.

இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணத்தை மறுநாள் காலை 5.25க்கு வந்தடைந்தடையும், அங்கிருந்து 5.30 க்கு புறப்பட்டு கோண்டாவில், சுன்னாகம், காங்கேசந்துறையை சென்றடையும்.

ஞாயிற்றுக் கிழமைகளில் காங்கேசன்துறையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு தெஹிவளையை சென்றடையவுள்ளது.

ஒரு வழி கட்டணமாக நகர் சேர் கடுகதிக்குரிய கட்டணமாக 2,800 ரூபாய் அறவிடப்படவுள்ளது.

இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண ரயில் நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய ரயில் நிலையங்களிலும் மேற்கொள்ளலாம்.

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்றார்.



# மன்னார் மீனவர்கள்; கடலில் அதிர்ஷ்டம்

ரொசேரியன் லெம்பர்ட்

பாம்பன் தெற்குவாடி துறைமுக பகுதியில் இருந்து 90க்கும் அதிகமான மீன்பிடி விசைப் படகுகளில் 1,000க்கும் அதிகமான மீனவர்கள், மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன் பிடிக்க சென்று, நேற்று அதிகாலை(16) கரை திரும்பினார்கள்.

இவ்வாறு கரை திரும்பிய மீனவர்களுக்கு, உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் நகரை, பரை, நெத்திலி உள்ளிட்ட மீன்களும் அதே போல் கிளாத்தி, சீலா, மாவுலா, கிளி, பாறை, முண்டகண்ணி பாறை, கட்டா, சூவாரை உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் வரத்தும் எதிர்பார்த்த அளவு கிடைத்துள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சியடந்துள்ளனர்.




தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு


# திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சி

தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 45 ஆரம்ப மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி ஜூன் மாதம் 11,12 ஆம் திகதிகளில் முதற்கட்டமாக தென்மராட்சி வலய கணினி வள நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியானது, அனைத்துலக மருத்துவ நல அமைப்பு-IMHO USA மற்றும் இரட்ணம் பவுண்டேசன் ( RATNAM FOUNDATION ) அமைப்பினரது நிதி அனுசரணையில், இசுருபாய கல்வி அமைச்சின் ஈ- தக்சலாவ, வடமராட்சி வலய கணினி வள நிலைய வளவாளர்களால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியின் இரண்டாம் நாளில் குறித்த அதிபர்களுடன் திறன் பலகை பாவனை பற்றியும் வலய கல்வி அலுவலக மேற்பார்வை நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டு ஆசிரியர்களுக்கான விரலிகளும் பெயர் பலகைகளும் வழங்கப்பட்டன.

இதில் வலயக் கல்வி பணிப்பாளர் கிருபாகரன் கலந்து கருத்துகளை வழங்கியிருந்தார். அனைத்துலக மருத்துவ நல அமைப்பின்- IMHO USA இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் கிருஷ்ணகுமார் நெறிப்படுத்தினார். இப்பயிற்சி நெறியின் இரண்டாம் கட்டம் ஆசிரியர்களினது வேண்டுகோளுக்கமைய மூன்று வாரங்களில் நடைபெறவுள்ளது.






சைக்கிளின் பின்னால் வேன் மோதியதில்

# 2 பெண்கள் காயம்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், மார்ட்டின் வீதி சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் (15) இரவு 7.30 மணியளவில், ஹயஸ் ரக வாகனம், மோட்டார் சைக்கிளின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### தவறான வரி கொள்கைகளே

# கழுத்தை நெரிக்கின்றன

## பாரத் தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் தவறான வரி கொள்கைகளும், பிரதான காரணமாகும்” என்று இ.தொ.காவின் உப தலைவரும், பிரஜா சக்தி திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிநீர் திட்டத்தைத் திறந்து வைக்கும்



நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

“ஏதேனுமொரு விடயத்துக்காக நாட்டு மக்கள் வரிசைகளில் காத்துக்கிடக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை வெகுவிரைவில் மாறி, இயல்பு நிலை திரும்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே, மக்கள் நலன் கருதி முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் ஆதரவு வழங்கும்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் வரி வருமானம் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பாதிக்கப்பட்டது. தற்போதை நெருக்கடி நிலைமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

இனம், மதம், மொழி, கட்சி என, பிரித்தாளும் தந்திரம் மூலம் தமது இருப்புகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசியல் வாதிகள் முற்பட்டனர். அந்த மாய வலைக்குள் மக்களும் சிக்கினர். இன்றைய பின்னடைவுக்கு மக்கள் பிரிந்து நின்றமையும் ஒரு காரணம். எனவே, நாம் இலங்கையர்களாக பயணிப்போம்.

சிறப்பான கொள்கைகளை முன்வைப்பவர்களை ஆதரிப்போம். அதனால்தான் தற்போதைய சூழ்நிலையில் இ.தொ.கா. நடுநிலை நிலைப்பாட்டை வகித்துவருகின்றது” என்றார்.



## மண்டலாபிஷேக ஆரம்ப விழா...

பதுளை, ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ முருகப் பெருமான் தேவஸ்தான மண்டலாபிஷேக ஆரம்ப விழா நேற்று (16) நடைபெற்றபோது, தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் க. ஜெயநாயகத்துக்கு பிரதம குருக்கள் கிரீடம் அணிவிப்பதையும் காளாஞ்சி பெறுவதையும், கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எம். செல்வராஜா)








### சர்வதேச வீட்டு பணியாளர்கள் தினத்தில்

## ஹட்டனில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ மலைவாஞ்ஞன்

நாடாளவிய ரீதியில் வீடுகளில் பணிபுரியும் வீட்டுவேலை பணியாளர்களின் தொழில் உரிமைகளை உறுதி செய்யக்கோரியும் விலையுயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும். சர்வதேச வீட்டுப் பணியாளர்கள் தினமான நேற்று (16) ஹட்டனில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தங்களின் உரிமைகளை சட்டமாக்குமாறும், தொழில் பாதுகாப்பு பெற்றுக்கொடுக்குமாறும், சர்வதேச தொழில் சாசனத்தை அமல்படுத்துமாறும் பொருட்களின் விலை அதிகரிப்புக்கேற்ப சம்பளம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பன போன்ற விடயங்களை ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.

ஹட்டன், மல்லியைப்பூ சந்தியிலிருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்ட பேரணி, ஹட்டன் தொழில் திணைக்களம் வரை சென்றது. அங்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. ‘ப்ரொடெக்ட்’ தொழிற்சங்கம் ஒழுங்கு செய்திருந்த குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், 200 இற்கும் அதிகமான வீட்டு வேலை தொழிலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

### வீட்டில் கடிதங்கள்:

## தபாற்காரருக்கு விளக்கமறியல்

■ எஸ். சதீஷ்

பொகவந்தலாவை உப தபால் நிலையத்தில் பணிபுரிந்து வந்த தபாற்காரர் ஒருவரை, இந்த மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிமன்ற நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் (16) நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை உப தபால் நிலையத்தில் தபாற்காரராக பணியாற்றும் இவர், கொட்டியாகலை பிரதேச மக்களுக்கு வரும் கடிதங்களை, உரியவர்களுக்கு



வழங்காமல், தமது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலை படுத்தப்பட்டார் என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் வீட்டில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே ஒரு தொகை கடிதங்கள் மீட்கப்பட்டன.

## “விலக்கவில்லை; விலகிவிட்டேன்”

■ ஆ.ரமேஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து தானே விலகிக் கொண்டதாகவும் தன்னை யாரும் விலக்கவில்லை என்றும் நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து வேலு யோகராஜை விலகிவிட்டதாக ஊடகங்களுக்கு அறிவித்துள்ள நிலையில், சில ஊடகங்களில் வேலு யோகராஜ்



விலக்கப்பட்டார் என இரு மாறுபட்ட செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே, இந்த விடயம் தொடர்பில், வேலு யோகராஜியிடம் வினவிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கந்தப்பளையில் சர்ச்சைக்குள்ளான காணி விவகாரம் தொடர்பில் உரிய ஆவணங்கள் தொடர்பில் காங்கிரஸின் ஒழுக்காற்று குழு நேற்று முன்தினம் (15) விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கந்தப்பளை காணி விவகாரம் தொடர்பில் வேலு யோகராஜியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையானது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒழுக்காற்று குழுவால் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தியோகப்பூர்வமாக வேலு யோகராஜூக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தலவாக்கலையில்

## கடை எரிந்து சாம்பலாகியது

■ எஸ்.கணேசன்

தலவாக்கலை நகரில் பழங்கள், மரக்கறி விற்பனை செய்து வந்த கடையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், கடை முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தீ விபத்து நேற்று முன்தினம் (15) இரவு 10 மணியளவில் ஏற்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸார், பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, குறித்த கடையின்



உரிமையாளர், அவரின் உதவியாளர் கடையில் இல்லாத போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயால் மரக்கறி, பழங்கள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. எனினும், தீயால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை கணிக்கப்படவில்லை எனவும், தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், தலவாக்கலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நுவரெலியாவில் யோகாசனம்

■ பி.கேதீஸ்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, கண்டி இந்திய தூதுவர் டொக்டர் செல்வி அதிராவின் அனுசரணையில், நுவரெலியா கிறகறி வாவி கரையிலுள்ள பூங்காவில் யோகாசன நிகழ்வு நடைபெறவுள்ளது.

நுவரெலியா உடற்பயிற்சி நிலையம், நுவரெலியா ரோட்டரிக்கழகம், நுவரெலியா லயன் கழகம் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த மாதம் 20 ஆம் திகதி காலை 6 மணி முதல் 7 மணிவரை நடைபெறும்.

இந்த யோகாசனம் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டுக்குழு சார்பில் நுவரெலியா லயன்ஸ் கழக செயலாளர் ஜெகதீசன் குமரேஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நஸ்லான் மாயம்

■ இக்பால் அலி

மாவத்தகம பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மெல்வத்த, வேஉடப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய முஹமட் நஸ்லான் என்ற இளைஞன், கொழும்பு ரயில் நிலையத்தில் வைத்து ஜூன் 8ஆம் திகதி காணாமற் போயுள்ளார்.

கொழும்பில் பிட்டிங் (பொருத்தல்) தொழில் புரிவதற்காக சென்றிருந்த இளைஞன், தனது நண்பருடன் கொழும்பிலிருந்து ஊருக்குச் செல்வதற்காக, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு வருகை தந்து காணாமல் போயுள்ளார் என அவரது நண்பர் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் ரயில் டிக்கட்டுகளை பெற்றுக்கொண்டு வரும் போது, நண்பர் காணாமல்



போயுள்ளதாக நண்பர், கோட்டை பொலிஸில் முறைபாடு செய்துள்ளார்.

இவர் பற்றிய தகல்வகள் கிடைக்கமாயின் அவருடைய தந்தை எம். டி. சாலிஹீன் 0758005637 அல்லது அவருடைய உறவினர் ஏ.எம். முஜாஹிரின் 0772820820 ஆகியோரின் அலைபேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு குடும்பத்தினர்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர்.

## குருவிக் கூடுகளை கடத்தியவர் கைது

■ ராமு தனராஜா, பாலித ஆரியவன்ஸ

10 இலட்சம் ரூபாய் பெறுமதியான மழைக்குருவி (தகைவிலான் குருவி) கூடுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று (16) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை விசேட பொலிஸ் பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்ல, தெமோதர, பதுளை ரயில் சுரங்களிலிருந்து இரண்டரை கிலோ கிராம் நிறையுடைய குறித்த கூடுளை சந்தேகநபர்கள் பெயர்த்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, பதுளப்பிட்டி பகுதியைச் சேர்த்த (42), (47) வயதுடைய இருவரே இவ்வாறு



கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கூடுகளை, கொழும்புக்கு கொண்டு சென்று, விற்பனை செய்யத் திட்டமிட்டு இருந்ததாகவும் கொழும்புக்கு புறப்பட்ட போது, பதுளுபிட்டிய மைதானத்துக்கு அருகில் வைத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குருவிக் கூட்டிலிருந்து பெறப்படும் ஒரு வகைப் பொருளைப் பயன்படுத்தி, செய்யப்படும் சூப் பானம், பாலியல் ரீதியான நோய்களுக்கு சிறந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறித்த குருவிக் கூடுகளை கிலோ கிராம் 4 இலட்சம் ரூபாய் வரை ஹோட்டல்களில் கொள்வனவு செய்யப்படுவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

### மாணவர்களை இலக்கு வைத்து

## போதைப்பொருள் விற்பனை

### இரண்டு இடங்களில் மூவர் கைது

■ எஸ். சதீஸ், ராமு தனராஜா

பொகவந்தலாவை பகுதியில் பிரதானமாக பாடசாலை மாணவர்களை குறிவைத்து போதைபொருள் விற்பனை செய்வது அதிகரித்து வருவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதற்கமைய, புகையிலைத் தூளை தம்வசம் வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களை பொகவந்தலாவை பொலிஸார் நேற்று முன்தினம் (15) கைது செய்துள்ளனர் .

குறித்த இருவரும் நகரிலுள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவருள் ஒருவர், ஏற்கெனவே பொகவந்தலாவை பகுதியில் போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, பதுளையிலும் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து ‘மாவா’ எனப்படும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பஸ் தரிப்பிடத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர், ஹாலி எல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சந்தேகநபரிடமிருந்து, 20 போதைப்பொருள் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை பதுளை நீதவான் நிலையத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# அபாயகரமாக பயணிப்பதை தவிர்ப்பதே காலத்தின் தேவையாகும்

தொற்று நோயாளர்கள், தொற்றா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள், எதிர்பாராத அளவுக்கு கூடிக்கொண்டே போகிறது. அதேபோல, திடீர் மரணங்களும் அதிகரித்துள்ளன. அந்தளவுக்கு ஒவ்வொருவரும் பல நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

எரிபொருட்களின் தட்டுப்பாட்டால், வீதியில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை கணிசமானளவு குறைந்துள்ளது. தங்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்திச் செய்து கொள்வதற்காக ஒவ்வொருவரும் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றனர். காலத்தின் கட்டாயத்தை கருத்தில்கொண்டு, பல நாள்களை பலரும், வீதிகளிலேயே செலவழித்துவிடுகின்றனர்.

குறிப்பாக, தங்களுடைய வாகனங்களுக்குத் தேவையான எரிபொருளுக்காக, ஒருசிலர் ஒருவாரத்துக்கு மேலாக இரவு பகல் பாராது, வீதிகளில் கழிக்கின்றனர். சாப்பாடு, உணவு இல்லாமல், மன உளைச்சலுக்கு உள்ளாகுவோர் பலர். நோய்வாய்ப்பட்டவர்களைக் கூட, உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியாத அவலமும் ஏற்பட்டுள்ளது.

எரிபொருளுக்காக வரிசையில் நின்றிருந்த வேளையில், திடீரென சுகவீனமடைந்த மற்றுமொரு சாரதியும் மரணத்தை தழுவிக்கொண்டார். இது, இறுதியான மரணமாக இருக்காது என்பது, நீண்டு செல்லும் வரிசைகளை அவதானிக்கின்ற போது நன்கு புலப்படுகின்றது.

கிடைக்கின்ற வேலையைச் செய்யப்போய், ஏற்படும் அனர்த்தங்களுக்குள் சிக்குண்டு மரணிப்போரும் உளர். இவையெல்லாம், அவர்களுடைய குடும்பங்களுக்கு பெரும் இழப்பாகவே அமைந்துவிடும். ஒரு குடும்பத்தில் இருக்கும் அனைவரும் வேலைக்குச் சென்றால் கூட, தற்போதைய விலைவாசி ஏற்றத்தைச் சமாளித்து, குடும்பத்தை கொண்டுநடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதில், குடும்பத்துக்காகவே உழைக்கும் குடும்பத்தலைவனின் இறப்பு, அந்தக்குடும்பத்தின் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிடும் என்பது மட்டுமே திண்ணமாகும். முகங்கொடுக்கமுடியாமல் திணறவைத்துக் கொண்டிருக்கும் தற்போதைய நெருக்கடி, இன்னும் சில வாரங்களுக்கு நீடிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளதால், அந்த வாரங்கள் இன்னுமின்னும் கடுமையானதாய் அமைந்துவிடும்.

இதற்கிடையில் முறையான போக்குவரத்து இன்மையால், கடமைகளுக்கு வருவோரும், வீடுகளுக்கு இன்றேல் தங்குமிடங்களுக்குச் செல்வோரும் கிடைக்கும் வாகனங்களில் தொற்றிக்கொண்டு பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது. இவை ஆபத்தான பயணங்களாகும் என்பதை நினைவில் கொள்க.

ரயில்களின் கூரைகளிலும் அக்கம் பக்கங்களிலும் நின்று கொண்டும் பயணிப்போர், பாலங்கள், ரயில் சுரங்கங்கள் தொடர்பில் அவதானமாய் இருக்கவேண்டும். இன்றேல், தேவையில்லாமல் அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

பஸ்களிலும், இரண்டு கதவுகளுக்கு வெளியே தொங்கிக்கொண்டு பயணிப்பதை தவிர்க்கவேண்டும். ஏதாவது அனர்த்தம் ஏற்படுமாயின், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனங்களும் இல்லை. அங்குச் சென்றாலும் போதியளவான மருந்துகள் கைவசமில்லை.

நாளாந்த தேவைகளை ஒவ்வொருவரும் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். அதற்காக குத்துக்கரணங்களை அடித்தே ஆகவேண்டும். அவற்றுக்கெல்லாம் உயிர் முக்கியமாகும். ஆகையால், அபாயகரமாக பயணிப்பதை தவிர்ப்பதே உசிதம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பகுத்து அறிபவர்களைப் பகுத்தறிவாளர் என்றும் சொல்லலாம். ஆனால், பகுத்தறிவாளர்களில் அநேகர், ஆன்மிகத்துக்கு முரணானவர்கள் என்றும் கருதுவதுண்டு.

மூடப் பழக்கங்கள் கொண்டவர்கள், எதையும் ஆராயாமல் முடிவுகளை எடுப்பவர்கள் போன்றோரை, பகுத்தளிவாளர்கள் தங்கள் சிந்தனைகள் மூலம் உயிர்ப்பித்தார்கள். ஆனால், ஆன்மிகத்தை அதனோடு இணைந்தவர்களை கிண்டலடிப்பது அறிவீனம்.

விழிப்புணர்வைத் தட்டியெழுப்பும் நல்ல சிந்தனையாளர்கள், ஆன்மிகத்துக்கு எதிரானவர்கள் அல்ல! உயிர் வாழ்க்கையின் சூட்சுமங்கள் என்ன என்பதை ஆன்மிகம் சொல்லுகின்றது. இறைநம்பிக்கை பொதுவானது.

கடவுள் யாவருக்கும் சகல உயிர்களுக்கும் பொதுவானவர். கடவுள் என்பதே, உண்மையின் வடிவம்; சூட்சுமத்தின் பொருள். இதை ஆராய்ந்து முடிவெடுக்க எவராலும் முடியாது. அகம் பொலிந்திட ஆன்மபலம் தேவையானது. உண்மை, நம்பிக்கை, ஒழுக்கம் உயிர்வாழ்வதற்கு தேவையானவை. இவற்றை இறை உணர்வுபூர்வமாகப் பெறுவதே ஆன்மிகம் ஆகும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

தேவதூத மனநிலை: பொதுப்புத்தியில்

# மாற்றமின்றி தீர்வு சாத்தியமில்லை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தற்போதைய நெருக்கடி, இலங்கையின் பொதுப்புத்தி மனநிலையைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. இன்று இலங்கையர்கள் எதிர்நோக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கான காரணங்களை, பொருளாதாரத்தின் மீதும் ஆட்சியாளர்கள் மீதும் போட்டுவிட்டு அப்பால் நகர முடியுமா? இதற்கு இலங்கையர்களாகிய நாங்கள், பொறுப்புக்கூற வேண்டியது இல்லையா?

இந்த நெருக்கடிக்கு நாமனைவரும் எவ்வாறு பங்களித்திருக்கிறோம்? இப்போதும் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, நாம் பங்களிக்கின்றோமா? நமது பங்களிப்பு, மக்கள் நலநோக்கில் நெருக்கடியை தீர்ப்பதாக இருக்கிறதா, அல்லது அரசியல்வாதிகளின் இழிசெயல்களுக்கு ஒத்தூதுவதன் மூலமும், அமைதிகாத்து அங்கிகரிப்பதன் மூலமும் இந்நெருக்கடி தொடர வழிசெய்கிறதா?

இவை குறித்து, என்றாவது நாம் சிந்தித்து இருக்கிறோமா? எல்லாவற்றிலும் மேலாக, இந்த நெருக்கடி நாமே நமது தலையில் போட்டுக் கொண்டது என்ற உண்மை, எம்மில் எத்தனை பேருக்கு உறைத்திருக்கிறது?

இப்போது புதிதாகப் பாராளுமன்றம் வந்திருக்கின்ற தம்மிக பெரேரா மீது நம்பிக்கை வைக்கச் சொல்லி, ஒரு பொதுப்புத்தி மனநிலை கட்டமைக்கப்படுகிறது. அவர் ஒரு 'வெற்றிகரமான வியாபாரி'; எனவே, அவரால் நாட்டை மீட்க இயலும் என்று பலர் சொல்கிறார்கள்.

ஏமாற்றாத, கொள்ளையடிக்காத, அரசியல்தரகு செய்யாத, மக்களைச் சுரண்டாத வெற்றிகரமான வியாபாரி என்று யாரும் கிடையாது. ஆனால், நவதாராளவாதச் சொல்லாடலில் இவை, 'புத்திசாலித்தனம்', 'நெழிவுசுழிவுகளை அறிந்திருத்தல்' என்றும் சொல்லப்படுகிறது.

ஏழை மக்களின் பசியை, குறுங்கடன் திட்டங்கள் மூலம் தீர்த்துவைத்தமைக்காக நோபல் பரிசுபெற்ற முஹமட் யூனிஸ், ஒரு கந்துவட்டிக்காரன் என்ற உண்மை சில ஆண்டுகளில் வெளியானது. இதே வகைப்பட்டதே, 'வெற்றிகரமான வியாபாரி' என்ற படிமம்.

சில காலத்துக்கு முன்னர், பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராவதற்கு தேசிய பட்டியல் ஊடாகப் பாராளுமன்றம் வந்தபோது, ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் உருவாக்கிய பொதுப்புத்தி மனநிலை, அவரை ஒரு பொருளாதார மீட்பராக முன்னிறுத்தியது.

இவ்வாறே, 2019ஆம் ஆண்டு நாட்டை மீட்பதற்கான வலுவான தலைவராக கோட்டாபய முன்னிறுத்தப்பட்டார். இவை இரண்டும், இலங்கையில் ஏற்படுத்திய பேரிடரர்களை நாமறிவோம். இவ்வாறு, தனிமனிதர்கள் மீது அதீத நம்பிக்கை வைக்கும் மனோபாவம், இலங்கை அரசியலுடன் பின்னிப் பிணைந்ததொன்று. அதன் அண்மைய உதாரணத்துக்கு ரணில் பிரதமரானவுடன், அவர் பொருளாதாரத்தை சீர்படுத்துவார் என்று சொல்லப்பட்ட கதைகளை நினைத்துப் பார்க்கலாம்.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கை அரசியல், தவிர்க்கவியலாமல் தனிநபர் வழிபாடுகளின் வழிப்பட்டதாகவே உருவானது. பின்கொலனிய இலங்கை அரசியலின் அடையாள உருவாக்கம், குடும்ப அரசியலாக அமைந்தபோதும் அதை உருமறைத்து, விக்கிரக வழிபாட்டு அரசியல் முன்னெழுந்தது.

டி.எஸ். சேனாநாயக்கவின் திடீர் மரணம், அவரைத் தேசபிதாவாக உருமாற்றவும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொலை, அவரை சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் நவீன தலைமகனாக உருவாக்கவும் உதவியது. இது காலப்போக்கில், இருபெரும் அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கும் அதன்வழிப்பட்ட குடும்ப அரசியலின் இருப்புக்கும் வழிகோலியது.

இதன் மறுகரையில், சிங்கள-பௌத்த தேசியவாதத்துக்குப் போட்டியாக எழுந்த தமிழ்த் தேசியவாதமும், படித்த உயர்வர்க்க ஆங்கிலம் பேசும் சட்டம் தெரிந்த தலைமைகளையே உருவாக்கியது. பின்கொலனிய இலங்கையில் முனைப்படைந்த இரண்டு தேசியவாதங்களும், உயர்வர்க்க நலன்களை அடையாள அரசியலின் ஊடு தக்கவைத்தது. அதற்கு, அடித்தள மக்களிடம் உருவாக்கப்பட்ட பொதுப்புத்தி மனநிலை முக்கிய காரணமானது.

இந்த மனோநிலை, குறித்த குடும்பங்களையும் தலைவர்களையும் முன்னுதாரணமாகவும் நாயகர்களாகவும் முன்னிறுத்தியது. 1980கள் வரை மிகுந்த செல்வாக்குடன் இருந்த போக்கு, சமூகத்தில் அரசியல் மேலாண்மைக்கான அங்கிகாரமாக மாறியது. இதனால் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைமைகள், விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகவும் அளவுகணக்கற்ற செல்வம் சேர்ப்பவர்களாகவும் அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்களாகவும் மாறினார்கள்.

இதில் முதலாவது வெடிப்பை, ரணசிங்க பிரேமதாஸ ஏற்படுத்தினார். எந்தவோர் அரசியல் குடும்பத்தின் பிரதிநிதியாகவோ, உயரடுக்கைச் சேர்ந்தவராகவோ இராத அவர், அடித்தட்டு மக்களின் புதிய நாயகனாக உருவானார். இது சிங்கள உயர்வர்க்க அரசியலடுக்குகளில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

தமிழ்த் தேசியவாதம் 1970களில் சந்தித்திருந்த நெருக்கடியும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் இயலாமையும், இளையோரின் உயிரோட்டமான அரசியல் எழுச்சியால், மோசமான பின்னடைவைச் சந்தித்தது. இளையோரின் அமைப்பாக்கமும் அதற்கான மக்கள் ஆதரவும், பாரம்பரிய தேசியவாதத் தலைமைகளின் விருப்புக்குரியதாக இருக்கவில்லை. 1980களில் விடுதலைப் புலிகளின் எழுச்சி, தமிழ்த் தேசியவாதத் தலைமைகளில் ஒரு வெடிப்பை ஏற்படுத்தியது.

இருதேசியவாதங்களிலும் 1980களில் ஏற்பட்ட வெடிப்புகள், பல வகைகளில் சாதாரண மக்களின் நீண்டகால கோரிக்கைகளின் எதிர்பார்ப்புகளின் வெளிப்பாடுகளாக இருந்தபோதும், அவை இன்னொரு வகையிலான விக்கிரக வழிபாட்டுக்கு வழிசெய்தன.

பிரேமதாஸவும் பிரபாகரனும் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட மனிதர்களாக மாறினார்கள். விமர்சனங்கள், கேள்விகள், எதிர்வினைகள் எதுவும் சகிக்கப்படவில்லை. இனமுரண்பாடு கொடிய போராகிய நிலையில், வலிமையான தலைவரின் தேவையை சிங்களத் தேசியவாதம் தொடர்ந்து வலியுறுத்தி, ராஜபக்ஷவின் வருகையை உறுதிசெய்தது. இந்த விக்கிர உருவாக்கத்தின் ஆபத்துகளை, சிங்கள - தமிழ்த் தேசியவாதங்கள் அனுபவித்த போதும், அதிலிருந்து இன்றுவரை வெளியாக இயலவில்லை. அதன் தொடர்ச்சியே, கோட்டாபயவின் வருகையாகும்.

இலங்கைக்கு ஒரு சர்வாதிகாரியே தேவை; இலங்கை சமூகத்தை, ஒழுங்கமுடையதாக மாற்ற வேண்டும். அதற்கு, மக்களை ஒரு கட்டமைப்புடன் இயக்கக்கூடிய இராணுவத் தலைவரே பொருத்தமானவர் ஆகிய கோஷங்களுக்குக் கிடைத்த அங்கிகாரமே, கோட்டாபயவின் தேர்தல் வெற்றியாகும்.

இது, மஹிந்தவின் தொடர்ச்சியாக இருந்தபோதும், அதிலிருந்து மிகவும் வேறுபட்டது. முதலாவது, தன்னை நேரடியாகவே சர்வாதிகாரி என அழைத்துக்கொண்ட ஒருவரை, தலைவராக இலங்கையர்கள் தெரிவு செய்தார்கள்.

இரண்டாவது, அரசியலுக்கு அப்பால் வல்லுனர்களின் மூலம், நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று முன்வைக்கப்பட்ட வாதத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கினார்கள்.

இன்றைய நெருக்கடி, இவ்விரண்டின் தோல்வியையும் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளது. ஆனால், இது பொதுப்புத்தியில் எதுவித மாற்றத்தையும் உருவாக்கவில்லை. முழுமையான சர்வாதிகார நடைமுறையில், நாட்டைக் கட்டியெழுப்ப இயலாது என்ற உண்மை, இப்போது இலங்கையர்களுக்கு உறைத்துள்ளதா என்ற கேள்விக்கான பதிலை, அடுத்த தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கும்.

கோட்டாபயவும் அவரது 'வியத்மக' கும்பலும் முன்மொழிந்த வல்லுனர் அரசியல் படுமோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது. ஆனால், இதை ஏற்றுக்கொள்ளப் பலரும் தயாராக இல்லை. இவ்வரசியலின் தொடர்ச்சியே, தம்மிக பெரேராவின் வருகையும் அதைச்சூழும் ஆரவாரங்களும் ஆகும்.

கோட்டாபய முன்மொழிந்த 'சர்வாதிகாரமும் வல்லுனர் அரசியலும்' இரண்டு அடிப்படைகளில் கட்டியெழுப்பப்பட்டன. ஒன்று, இராணுவ மையச் சிந்தனைவாதம். இரண்டாவது, சிங்கள-பௌத்த பேரினவாதம். இந்த நெருக்கடி இவ்விரண்டிலும் எதுவித மாற்றத்தையும் செய்துவிடவில்லை. மாறாக, இவ்விரண்டும் தொடர்ந்தும் சிங்கள மக்கள் மத்தியிலான பொதுப்புத்தி மனநிலையில் செல்வாக்குச் செலுத்துகிறது.

கடந்த கால் நூற்றாண்டுகால இலங்கை அரசியலில், 'வலுவான தலைவன்' என்ற படிமம் ஆழமாகப் பதிந்துள்ளது. நெருக்கடிக்குள்ளாகும் ஒவ்வொரு தடவையும், எந்த அடித்தளத்தில் இது தன்னைக் கட்டமைத்துள்ளதோ அதன் உதவியோடோ தன்னை அது தகவமைக்கிறது.

இலங்கையின் தலைமைத்துவ நெருக்கடி, இன்னும் சரியாகச் சொல்வதானால் தேசியவாதங்களின் பிரதிநிதித்துவ நெருக்கடியின் நீண்டகால இயலாமையே, தேவதூதர்களை தமது தேசியவாதம் சார்ந்து இலங்கையர்கள் தொடர்ந்து தேடிவருகிறார்கள்.

பொருளாதார அடியாள்கள், இப்போது புதிதாக தேவதூதர்களாக வேடம் தரிக்கிறார்கள். அவ்வேடத்துக்கான அங்கிகாரத்தை வெற்றிகரமான வியாபாரி என்ற முகமூடியூடாகச் சிலர் வழங்குகிறார்கள். அவர்கள் சொல்வது போல அவர் வெற்றிகரதான வியாபாரி என்ற பொதுப்புத்தி மனநிலையில், எதிர்காலம் பற்றி நம்பிக்கை வைப்பார்களானால், வேட்டி பற்றிய கனவில் இருந்த போது, கட்டியிருந்த கோவணம் காணாமல் போகுங்கணம் என்ன செய்வதென்று உத்தேசிப்பது நல்லது.

## கடிதங்கள்

கல்முனை நூலகத்தை திறன்பட இயக்க

### மாநகர நிர்வாகம் முன்வருமா?

கல்முனை மாநகர பிரதம நூலகமான 'ஏ.ஆர். மன்சூர் நூலகம்' கவனிப்பாரற்று குப்பை மேடாகக் காட்சி தருகின்றது. 1980 முதல் 1983 காலப்பகுதியில் கல்முனை வாசிக சாலை, முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீதால் திறந்து வைக்கப்பட்டது. அக்காலத்தில், இந்த நூலகத்தில் மிகவும் பெறுமதியான நூல்கள் இருந்தன. இப்போது, அறிவுநூல்கள் மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் கலாநிதி ஏ.ஆர். மன்சூரின் சேவைகளை பாராட்டி, இந்த வாசிகசாலைக்கு அவரது பெயரே சூட்டப்பட்டது.

கல்முனை மேயர், கல்முனை பிரதி முதல்வர், ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்றோரின் அலுவலகங்கள் அடங்கலாக, கல்முனை மாநகர சபையின் நிர்வாகம் இடம்பெற்றுவரும் வளாகத்தில் அமைந்துள்ள இந்த வாசிகசாலையைக் கூட, ஒழுங்காக நிர்வகிக்க முடியாத அளவில் கல்முனை மாநகர சபை நிர்வாகம் இயங்குவதாகவும், இது தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் யாரும் கணக்கில் எடுக்காமல் இருப்பது வேதனையளிப்பதாகவும் ஓர் அறிவுள்ள சமூகத்தின் உயிராக விளங்கும் வாசிக சாலை இவ்வாறு அழியவிடப்பட்டிருப்பது குறித்து வாசகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக, சிறந்த தீர்வை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக பெற்றுத்தருமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

-நூருல் ஹுதா உமர்

# Rhoda மின் சைக்கிள்களுக்கு செலான் வங்கியின் சேவை

செலான் வங்கி, Rhoda Life பிரைவட் லிமிடெட் உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, உள்நாட்டு புத்தாக்கமான பிரயாணத் தீர்வாக அமைந்துள்ள Rhoda நிறுவனத்துக்கு பல வங்கிச் சேவை வசதிகளையும் வலையமைப்பு வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் முதலாவது மின் ஸ்மார்ட் சைக்கிள் வடிவமைப்பாளரும், உற்பத்தியாளருமாக Rhoda திகழ்கின்றது.




வளர்ச்சிக்குரிய சகல வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு செலான் வங்கி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. நிதிச் சேவை வழங்குநர் எனும் பாரம்பரிய நிலைக்கு அப்பால் சென்று, தனது வாடிக்கையாளர்களுக்கு வசதிகள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் தற்போது கவனம் செலுத்துவதுடன், இளைஞர்கள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்கள் மீது விசேடமாக கவனம் செலுத்துகின்றது. தொழில்முயற்சியாண்மை மற்றும் சிறிய நடுத்தரளவு வியாபாரங்கள் போன்றவற்றின் விருத்திக்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும் என்பதில் செலான் வங்கி உறுதியாக உள்ளதுடன், இவற்றை ஊக்குவிப்பதனூடாக தேசிய பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து வலுவூட்டுவது எமது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. தனியார் வங்கிப் பிரிவில் மூன்றாவது மாபெரும் பங்களிப்பாளராக செலான் அமைந்திருந்ததுடன், கொவிட் தொற்றுப் பரவல் காணப்பட்ட காலப்பகுதியில் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு ஆதரவளித்ததுடன், இந்தத் துறைகளில் எமது திட்டங்களை தொடர்ந்திருந்தோம். Rhoda உடன் கைகோர்ப்பது எமக்கு முக்கியமான மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கான செலான் வங்கியின் உறுதிமொழியை பூர்த்தி செய்து, இந்தப் பயணத்தில் நீங்கள் தனித்திருப்பதில்லை என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. உங்களின் வங்கி எனும் வகையில், உங்களுடன் செலான் வங்கி இணைந்திருக்கும் என்பதுடன், உங்களின் முழு ஆற்றலையும் வெளிப்படுத்த உதவியாக அமைந்திருக்கும். சவால்களுக்குட்படுத்தும் மனநிலையை நாம் வரவேற்பதுடன், உங்கள் வியாபார முயற்சிக்கு பொருத்தமான கட்டமைப்புக்கு ஆதரவளிப்போம்” என்றார்.

Rhoda உடன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளர் எனும் இந்தப் பங்காண்மையினூடாக, நிதிச் சேவைகள் வழங்கப்படுவது மாத்திரமன்றி, வங்கியின் வலையமைப்பு மற்றும் பங்காளர்களினூடாக பல இதர வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும். வியாபாரத்தின் மிருதுவான செயற்பாடுகளை உறுதி செய்யும் வங்கிச் சேவைகளை Rhoda பெற்றுக் கொள்ளும் என்பதுடன், Point of Sales (POS) இயந்திரங்கள், ஒன்லைன் கொடுப்பனவுகளுக்கான இணையக் கொடுப்பனவு கேட்வேகள் மற்றும் திரட்டல் கணக்குகள் போன்றன அடங்கியிருக்கும். 0% வட்டியில்லாத தவணை முறை மீளச் செலுத்தும் திட்டங்கள் மற்றும் பிரத்தியேகக் கடன் வசதிகள் போன்றவற்றை Rhoda விற்பனைக்காக வழங்கும். மேலும், வங்கியின் வலையமைப்பு Rhoda க்கு புதிய வியாபார வாய்ப்புகளை ஒன்லைன் மற்றும் ஓஃப்லைன் பகுதிகளில் எதிர்பார்ப்பதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

### யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான

# நிதிப் பெறுபேறுகளைப் பதிவு

2022 நிதியாண்டை யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி உறுதியான நிதிப் பெறுபேறுகளுடன் ஆரம்பித்துள்ளது. இதனூடாக சிறந்த நிதி வளர்ச்சியை எய்தியுள்ளது. சவால்கள் நிறைந்த சூழலிலும், நிகர செலுத்திய தவணைக்கட்டணங்கள் முதல் வரிக்கு முந்திய இலாபம் மற்றும் மொத்த தேறிய வருமானம் போன்ற பிரதான பிரிவுகளில் முன்னேற்றத்தை எய்தி சிறப்பான வகையில் வளர்ச்சியை எய்தியிருந்தது. கடந்த ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், நடப்பு ஆண்டின் உரிமைகோரல்களில் ரூ. 1.4 பில்லியன் பெறுமதியையும் பதிவு செய்திருந்தது.




யூனியன் அஷ்யூரன்ஸ், ஆயுள் நிதியம் தற்போது ரூ. 50 பில்லியனாக அமைந்திருப்பதுடன், நிகர செலுத்திய தவணைக்கட்டணம் 17% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 3.4 பில்லியனிலிருந்து ரூ. 4 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய செலுத்திய தவணைக்கட்டணம் ரூ. 3.2 பில்லியனிலிருந்து ரூ. 3.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய வருமானம் ரூ. 4.70 பில்லியனிலிருந்து ரூ. 4.73 பில்லியனாக உயர்ந்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் 17% இனால் வளர்ச்சியடைந்து ரூ. 238 மில்லியனிலிருந்து ரூ. 279 மில்லியனாக உயர்ந்திருந்தது. நிறுவனத்தின் வழமையான வியாபார தவணைக் கட்டணங்கள் 17% இனால் உயர்ந்திருந்தது. துறைசார் சராசரி பெறுமதி 10% ஆக காணப்பட்டது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் 3ஆம் மாபெரும் புதிய வியாபார உற்பத்தியாளராக பதிவாகியிருந்தது. முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், பங்காளர்களுக்கு பங்கிலாபங்கள் எனும் வகையில் ரூ. 1.3 பில்லியனை எய்தியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் நிறுவனத்தின் முதல் காலாண்டின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “இந்தச் சாதனை எய்துவதற்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து அணியினருக்கும் நன்றி. ஆயுள் காப்புறுதி தொழிற்துறையில் முன்னோடியாக அமைந்துள்ளது. முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், பிரதான நிதி குறிகாட்டிகளில் நாம் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எய்தியிருந்தோம். எமது வாடிக்கையாளரை மையப்படுத்திய தந்திரோபாயம், சேவைச் சிறப்பு மற்றும் புரட்சிகரமான டிஜிட்டல் ஆற்றல்களினூடாக எம்மால் இந்த சாதனைப் பெறுமதியை எய்த முடிந்திருந்தது” என்றார்.

கோம்ஸ் தொடர்ந்து தெரிவிக்கையில், “இந்த ஆண்டில் எய்தப்படவுள்ள சிறந்த அம்சங்களுக்கு எடுத்துக்காட்டாக இந்த வினைத்திறன் அமைந்துள்ளது. நிறுவனத்தின் நிபுணத்துவம் மற்றும் புத்தாக்கமான ஈடுபாட்டினூடாக இலங்கையில் பாதுகாப்பான இடைவெளியை பேண முடிந்திருந்தது. எதிர்காலத்தில் நாம் முன்நோக்கி நகரவுள்ள நிலையில், எம்மால் மேலும் சிறந்த மைல்கல் சாதனைகளை எய்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுவூட்டக்கூடியதாக அமைந்துள்ளது” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், “உறுதியான நிதி இருப்புடன், வினைத்திறனான முகாமைத்துவ கட்டமைப்புகள், செயன்முறைகளின் அடிப்படையில், தொடர்ச்சியான வளர்ச்சியை எய்தியிருந்தது. முதல் காலாண்டில் நிறுவனத்தின் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20% உயர்வாக பதிவாகி ரூ. 201 மில்லியனிலிருந்து ரூ. 240 மில்லியனாக பதிவாகியிருந்தது. மொத்தசொத்துகளின் பெறுமதி ரூ. 70 பில்லியனாக உயர்ந்திருந்தது. சந்தை மூலதனவாக்கம் ரூ. 17.9 பில்லியனாக பதிவாகியிருந்தது” என்றார்.



### இராணுவத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு:

# ‘அக்னிபத்’ திட்டத்துக்கு எதிராக பீஹார், ஜார்க்கண்டில் போராட்டம்

பாட்னா

இந்திய இராணுவத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ‘அக்னிபத்’ திட்டத்துக்கு பீஹாரில் எதிர்ப்பு கிளம்பியது. பீகார், அரியானா, தமிழ்நாடு,ஜார்க்கண்ட் உட்பட பல இடங்களில் போராட்டம் நடந்தது. அதில் சில இடங்களில் வன்முறையாக மாறியது.

‘அக்னி வீரர்கள்’ என்ற இத்திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டு கால ஒப்பந்தத்தில் வீரர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இளைஞர்களை நான்கு ஆண்டுகால பணியில் இராணுவத்தில் சேர்க்கும் அக்கினிபாத் திட்டம் கொண்டுவரப்பட்டால், வீரர்கள் குறுகிய காலம் மட்டுமே பணியில் இருக்க முடியும் என்றும்,



அதன்பிறகு வேறு வேலையை தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் இதனால் ஓய்வூதியம் உள்ளிட்ட பலன்கள் கிடைக்காது எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். நான்கு ஆண்டுகளுக்கு பிறகு தங்கள் நிலை என்ன? என கேள்வி எழுப்பிய இளைஞர்கள், மக்கள் அனைத்தையும் அறிந்திருக்கிறார்கள் என்பதை ஆட்சியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தான் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் அவர்கள் கூறினர்.

டயர்களை எரித்து, பஸ்கள், ரயில்கள் ஆகியவற்றை மறித்து போராட்டம் நடத்தியதால் பதற்றமான சூழ்நிலை நிலவியது. பாபுவா சாலை ரயில் நிலையத்தில், இண்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில் மீது போராட்டக்காரர்கள் கல்வீசி தாக்கினர்; ஒரு பெட்டிக்கு தீவைத்தனர். பொலிஸார் மீதும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

# மோடியின் தாய்க்கு 100 வயது

ஆமதாபாத்



பிரதமர் மோடியின் தாய் ஹீரா பென்னுக்கு நாளை 99 வயது முடிந்து 100ஆவது வயது பிறக்கிறது.

பிரதமர் மோடியின் தாய் ஹீராபென், குஜராத் மாநிலம், காந்திநகரில் வசிக்கிறார். 1923ஆம் வருடம் ஜூன் 18ஆம் திகதி பிறந்த ஹீரா பென்னுக்கு, 18ஆம் திகதி 99 வயது முடிந்து 100 வயது பிறக்கிறது. இதையடுத்து, குஜராத்துக்கு செல்லும் பிரதமர் மோடி, தாயை சந்தித்து ஆசி பெறுகிறார்.

மேலும், மோடியின் சகோதரர்கள், தாயின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, ஆமதாபாதில் உள்ள ஜகன்நாதர் கோவிலில் சிறப்பு அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதிலும், மோடி பங்கேற்பார்.

# குடியரசுத் தலைவர் தேர்தலில் காந்தீயவாதி போட்டி

புது

தற்போது குடியரசுத் தலைவராக பதவி வகித்து வரும் ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் வரும் ஜூலை 24ஆம் திகதி முடிவடைகிறது. எனவே, புதிய குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூலை 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்படி, குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுமுன்தினம் (15) தொடங்கியது. குடியரசுத் தலைவரை நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்களும் வாக்களித்து தெரிவு செய்கின்றனர்.

குடியரசுத் தலைவர் தேர்தலில், 776 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்டப்பேரவைகளில் உள்ள 4,033 எம்.எல்.ஏக்கள் என ஒட்டுமொத்தமாக 4,809 பேர் வாக்களிக்க உள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, நாமக்கல் மாவட்டம், மேற்கு பாலப்பட்டியை சேர்ந்த காந்தியவாதி ரமேஷ், அகிம்சா சோசியலிஸ்ட் கட்சி தலைவராகவும், யோகா மாஸ்டராகவும் உள்ளார். இவர் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு, புதுடெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஜனாதிபதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்.



# தனக்குத் தானே கல்லறை கட்டிய மூதாட்டி

## உடல் நலக்குறைவால் மரணம்

நாகர்கோவில்



தனக்கு யாரும் இல்லை என்பதை மனதில் வைத்து, தனக்கு சொந்தமான இடத்தில் கல்லறை கட்டி, கல்லறை அருகிலேயே இரண்டு அறைகள் கட்டி ரோசி என்ற இந்த மூதாட்டி வசித்து வந்துள்ளார்.

கொல்லங்கோடு பகுதியை சேர்ந்தவர் ரோசி (வயது 70). திருமணமாகாத இவர், தனியாக வசித்து வந்தார். 100 நாள் வேலை திட்டத்தில் பணிக்குச் சென்று வந்த இவரை, உறவினர் விஜயன் அடிக்கடி சந்தித்து பேசி வந்துள்ளார். இந்த நிலையில் ரோசி வீட்டில் இருந்து துர்நாற்றம் வந்துள்ளது. இதுகுறித்து அவரது வீட்டருகே வசிப்பவர்கள் விஜயனுக்கு தகவல் கொடுத்தனர். தொடர்ந்து விஜயன் அங்கு சென்று பார்த்த போது ரோசி உடல் அழுகிய நிலையில் பிணமாக கிடந்துள்ளார்.

இதற்கிடையில், இறந்து போன ரோசி, தனக்கு யாரும் இல்லை என்பதை மனதில் வைத்து, 2016ஆம் ஆண்டு தனக்கு சொந்தமான இடத்தில் கல்லறை கட்டி பால் காய்ச்சியுள்ளார் என்ற தகவல் இப்போது கிடைத்துள்ளது. கல்லறை அருகிலேயே இரண்டு அறைகள் கட்டி ரோசி வசித்து வந்துள்ளார்.

# ஏ.ஆர் ரஹ்மான் மகள் திருமண வரவேற்பு

சென்னை

முன்னணி இசையமைப்பாளர் ஏ.ஆர் ரஹ்மானின் மூத்த மகள் கதீஜாவுக்கும் இசைக் கலைஞர் ஷேக் முஹமதுவுக்கும் மே மாதம் ஆறாம் திகதி திருமணம் நடந்த நிலையில், நேற்று இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி, ஏ.ஆர். ரஹ்மான் பிலிம் சிட்டியில் நடந்தது. இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தனது மனைவி துர்காவுடன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி, அவர்களுக்கு மரக்கன்று பசுமைக்கூடையை வழங்கினார்.



அமெரிக்கா

பெண்களுக்கான சுகாதார

# துவாய்களுக்கு தட்டுப்பாடு

அமெரிக்காவில் பெண்களுக்கான சுகாதாரத் துவாய்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பிரபல ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

ரஷ்யா, உக்ரேன் இடையே நீடித்து வரும் போர் காரணமாக அந்நாடுகளில் இருந்து வரும் உரம் வழங்கல் தடைப்பட்டுள்ளதால், சுகாதார துவாய்களின் தயாரிப்புக்கு




மூலப்பொருளான பருத்தியின் விளைச்சல் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்றாக்குறை காரணமாகவும் இதன் உற்பத்தி குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஓராண்டுக்கு முன் இருந்ததைவிட தற்போது 10 % சுகாதாரத் துவாய்களின் விலை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குரங்கு அம்மை நோய்க்கு புதிய பெயர்



'குரங்கு அம்மை' என்பதற்குப் பதிலாக புதிய பெயரொன்றை வைக்க வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலகம் முழுவதும் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இதுவரை 39 நாடுகளில் இந்நோய் பரவியுள்ளது. உலகளவில் 72 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 1,100 க்கும் மேற்பட்டவர்களுக்கு குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 29 உயிரியலாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழு, கடந்த வாரம் குரங்கு அம்மை நோய்க்கு புதிய பெயர் சூட்ட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது: "குரங்கு அம்மை வைரஸ் பரவல் ஆபிரிக்காவின் தெளிவான தொடர்பு இல்லாமல் கண்டறியப்பட்டுள்ளது.

ஊடகங்களில் ஆபிரிக்க நோயாளிகளின் புகைப்படங்களை பயன்படுத்துவது பாகுபாடு மற்றும் களங்கம் ஏற்படுத்துவதாக உள்ளது.

இந்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து குரங்கு அம்மை வைரஸின் பெயர்களை மாற்றுவது மற்றும் அது ஏற்படுத்தும் நோயின் பெயரை மாற்றுவது குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.




பெல்ஜியம்

## சுழலும் உணவகம்

பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நில மட்டத்திலிருந்து 50 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள 'டின்னர் இன் தி ஸ்கை' என்ற உணவகம் சுற்றுலா பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

360 பாகையில் சுழலும் இவ் உணவகமானது 32 இருக்கைகள் கொண்டு அமைக்கப்ப ட்டுள்ளதோடு, கிரேனின் உதவியுடன் வானில் நிறுத்தப்பட்டுள்ளது.


மேலும் இவ் உணவகத்தில், நபர் ஒருவருக்கு 350 டொலர் வரை கட்டணமாக வசூலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

## விடைபெற்றது 'இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர்'

27 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்த மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் சேவை நேற்று முன்தினம் (15) தனது சேவையை முற்றுமுழுதாக நிறுத்தியது. 1995ஆம் ஆண்டு விண்டோஸ் 95 உடன் அறிமுகப்படுத்தப்பட்ட இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர், 90 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஆடம்பர அறிவியல் உலகின் தொடக்கமாக இருந்தது.



எனினும் காலப்போக்கில், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்ததாலும், மேம்படுத்திய தேடுபொறிகளின் வருகையாலும், அதன் சேவையை மைக்ரோசொப்ட் நிறுவனம் நிறுத்தியுள்ளது.

பாகிஸ்தான்

## தேநீர் அருந்துவதை குறைத்து கொள்ளுங்கள்

### பொதுமக்களிடம் அரசு வேண்டுகோள்

அண்மைக்காலமாகப் பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றது.

இந்நிலையில் இறக்குமதி செலவை கட்டுப்படுத்தும் நோக்கில், தேநீர் அருந்துவதைக் குறைத்துக் கொள்ளுமாறு மக்களிடம் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தானின் திட்டக்குழு அமைச்சர் ஆஹ்சன் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில்; "உலகில், தேயிலையை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடாக பாகிஸ்தான் உள்ளது. எனினும் தற்போது நாடு கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதால், இறக்குமதி செய்யப்படும் தேயிலைக்கு பணம் செலுத்த முடியவில்லை. அதனால் நாட்டு நலன் கருதி, பாகிஸ்தான் மக்கள் தினமும் பருகும் தேநீரின் அளவை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சரின் இக்கோரிக்கைக்கு, அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்கா

## கரப்பான் வளர்க்க ரூ. 7 இலட்சம்

அமெரிக்காவின் வடக்கு கரோலினா பகுதியில் 'தி பெஸ்ட் இன்ஃபார்ம்' என்ற பூச்சிக்கொல்லி நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் அண்மையில் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில், 'வீட்டில் 100 கரப்பான் பூச்சிகள் வரை வளர்ப்பவர்களுக்கு 2,000 டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 7 இலட்சம் ரூபாய்) வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இந் நிறுவனம் உருவாக்கியுள்ள புதிய



பூச்சிக்கொல்லி அமைப்பு, எவ்வாறு வேலை செய்கிறது என்பதை பரிசோதனை செய்வதற்காக இப்புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிட்டத்தட்ட 30 நாள்களுக்கு இந்தப் பரிசோதனை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான 2ஆவது ODI போட்டியில்

# 220 ஓட்டங்களையே பெற்ற இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் (ODI) 47.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.




தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

அவுஸ்திரேலிய அணி சார்பாக கடந்த போட்டியில் காயமடைந்த மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், அஸ்தன் அகர் மற்றும் ஜஹைற றிச்சர்ட்ஸனை ட்ரெவிஸ் ஹெட், மத்தியூ கூமென், மிற்செல் ஸ்வப்ஸன் பிரதியிட்டிருந்தனர். இதில் கூமன் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையணி சார்பாக கடந்த போட்டியில் உபாதைக்குள்ளான வனிடு ஹஸரங்கவை ஜெஃப்ரி வன்டர்சே பிரதியிட்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணியின் வீரர்கள் ஆரம்பங்களைப் பெற்றபோதும் எவரும் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடியிருக்காத நிலையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்து 47.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழையால் இனிங்ஸ் இடைநிறுத்தப்பட்டது.

அப்போது களத்தில் துஷ்மந்த சமீர 7 (18) ஓட்டங்களுடனும், மகேஷ் தீக்ஷன 11 (14) ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

## இந்தியக் குழாமில் ராகுல் ட்ரிபாதி

அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாமில் ராகுல் ட்ரிபாதி இடம்பெற்றுள்ளார். இந்தியக் குழாமொன்றில் ட்ரிபாதி இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்நிலையில், காயத்திலிருந்து குணமடைந்து சூரியகுமார் யாதவ் குழாமுக்குத் திரும்பியுள்ள நிலையில், சஞ்சு சாம்ஸனும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, அணித்தலைவராக ஹர்டிக் பாண்டியாவும், உப அணித்தலைவராக புவ்னேஷ்வர் குமாரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

இத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில் இங்கிலாந்துக்கெதிரான இந்தியாவின் ஐந்தாவது டெஸ்டுக்கான தயார்படுத்தலும் இடம்பெறுமென்ற நிலையில், டெஸ்ட் குழாமில் இடம்பெற்றவர்கள் இதில் இடம்பெறவில்லை.



குழாம்: ஹர்டிக் பாண்டியா (அணித்தலைவர்), புவ்னேஷ்வர் குமார் (உப அணித்தலைவர்), இஷன் கிஷன், ருத்துராஜ் கைகவாட், சஞ்சு சாம்ஸன், சூரியகுமார் யாதவ், வெங்கடேஷ் ஐயர், தீபக் ஹூடா, ராகுல் ட்ரிபாதி, தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், ரவி பிஷ்னோய், ஹர்ஷால் பட்டேல், ஆவேஷ் கான், அர்ஷ்டீப் சிங், உம்ரான் மலிக்.

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த வடக்கின் நீலங்களின் சமர்

■ எஸ் தில்லைநாதன்

வடக்கின் நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிகள் மோதும் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தஜீபன் 41, பாவலன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், தமிழ்ப்பிரியன் 4, ஹரிசாந் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தனது முதலாவது துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி சகல




விக்கெட்டுகளையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், பகலவன் 38, கிருசாந்தன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அபிராஜ், பிரதாப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 8 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது.

இந்நிலையில், 200 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

திருகோணமலை சென். அந்தனிஸ் வி.க தொடர்:

## சம்பியனான ஜமாலியா

■ எப். முபாரக்

திருகோணமலை சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 100ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஜமாலியா அணி சம்பியனானது.

ஏகாம்பரம் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பிக் பூட் விளையாட்டுக் கழகத்துடனான இறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஜமாலியா சம்பியனானது.

சம்பியனான ஜமாலியாவுக்கு 50,000 ரூபாய் பணப் பரிசிலும் கிண்ணமும் இரண்டாமிடம்




பெற்ற பிக் பூட்டுக்கு 25,000 ரூபாய் பணமும் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 17 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.